| 01 | கணக்கீடு<br>அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்<br>தரம் 12<br>**கணக்கீட்டின் அறிமுகம்** |
|---|---|

# பகுதி 1

01) கணக்கீட்டின் பிரதான நோக்கமாவது

1. கணக்கீட்டு அலகுடன் தொடர்புடைய தகவல்களை கணக்குப் புத்தகத்தில் பதிதல்
2. கணக்கீட்டு அலகு சம்பந்தமான தீர்மானம் எடுப்பதற்கு முகாமையாளருக்கு தேவையான தகவல்களை வழங்கல்.
3. கடந்தகால கொடுக்கல் வாங்கல்கள், மற்றும் நிகழ்வுகள் உடன் தொடர்புடைய தகவல்களை பொருளாதாரத் தீர்மானம் எடுப்பதற்கு பொருத்தமான முறையில் மாற்றியமைத்தல்.
4. நிறுவனத்தின் எல்லா முகாமைத்துவ மட்டங்களுக்கும் தேவையான நிதி, நிதியல்லா தகவல்களை வழங்குதல்.
5. கணக்கீட்டுடன் தொடர்புடைய அக்கறையுள்ள கட்சியினருக்கு தீர்மானம் மேற்கொள்வதற்கு தேவையான பொருளாதார தகவல்களை வழங்குதல்.

02) அரச நிறுவனத்துடன் தொடர்புடைய **பொருத்தமற்ற** கூற்றை இனங்காண்க

(அ) சரியான முறையில் வரி செலுத்தப்படுகின்றதா என்பது
(ஆ) திட்டம் சரியான முறையில் தீட்டப்பட்டுள்ளதா என்பது
(இ) நியாயமான விலையில் தரத்துடன் கூடிய உற்பத்திகளை வழங்குகின்றதா என்பது.
(ஈ) சம்பளத்தை அதிகரிப்பதற்கு நிறுவனத்துக்கு திறமை இல்லையா? இருக்கிறதா? என்பது

1. அ உம் ஆ உம்
2. ஆ உம் இ உம்
3. இ உம் ஈ உம்
4. அ உம் இ உம்
5. ஆ உம் ஈ உம்

03) பின்வரும் கூற்றுக்கள் உண்மையா? பொய்யா? எனக் குறிப்பிடுக.

1. கணக்கீட்டில் பொருளாதார தகவல் எனக் குறிப்பிடுவது நிதித்தகவல்களாகும். ( )
2. வரலாற்று மற்றும் மதிப்பிடப்பட்ட தகவல்களை வழங்குவது நிதிக்கணக்கீட்டின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. ( )
3. முகாமைக்கணக்கீட்டின் மூலமாக பொது நோக்கத்துக்கான முடிவுக் கணக்கறிக்கைகள் வெளியிடப்படுகின்றது. ( )
4. கணக்கீட்டடின் உள்ளீடாக கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளைக் குறிப்பிடலாம். ( )

BUSINESS & COMMERCE BRANCH

04) இடைவெளி நிரப்புக.

1. சமூகத்தில் உள்ள மனிதர்களின் சிந்தனை எதிர்பார்ப்பு, எண்ணங்கள் தொடர்பான சுற்றுவட்டம் ________________________ சுற்றாடல் என அழைக்கப்படும்.
2. உள்வாரி, வெளிவாரியான அக்கறையுள்ள தரப்பினருக்கு தகவல்களை வழங்குவது ________________________ கணக்கீட்டின் மூலம் நடைபெறும்.
3. முதலீட்டு தீர்மானம் எடுப்பதற்கான தகவல்கள் ________________________ கணக்கின் மூலமாக பெறப்படுகிறது.
4. இரு தரப்பினருக்கிடையிலே பரிமாற்றம் நடைபெறாவிட்டாலும் நிறுவனத்தின் சொத்து, பொறுப்பு, உரிமையில் மாற்றத்தை ஏற்படுத்துகின்ற பணத்தினால் மதிப்பிடக்கூடியவை ________________________ ஆகும்.

05) கணக்கீட்டுச் செயற்பாட்டை படிமுறையில் காட்டுவது.

அ. பேரேட்டுக் கணக்குகளை சமப்படுத்தி பரீட்சை மீதியைத் தயாரித்தல்
ஆ. நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை பணத்தினால் மதிப்பிடல்.
இ. நிதிக்கூற்றுக்களை தயாரித்தல்.
ஈ. மூல ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு மூலஏடுகளுக்கு மாற்றுதல்.
உ. மூலஏடுகளில் பதியப்பட்டதை பேரேட்டு கணக்குகளுக்கு மாற்றல்.

1. அ,ஆ,இ,ஈ,உ
2. ஆ,அ,உ,ஈ,இ
3. ஆ,ஈ,உ,அ,இ
4. ஈ,ஆ,உ,அ,இ
5. ஈ,உ,இ,ஆ,அ

06) முகாமைக்கணக்கீட்டுத் தகவல்களை வழங்குவதிலிருந்து நிதிக்கணக்கீடு வேறுபடுவது.

1. அக்கறை உள்ள சகல தரப்பினர்களுக்கு தகவல்களை வழங்குதல்.
2. கடந்தகால நிகழ்வுகளிலிருந்து மட்டும் தகவல்களைப் வழங்குதல்.
3. வெளிவாரியான கட்சியினர்களின் தேவைக்கு மாத்திரம் தகவல்களை வழங்குதல்.
4. கடந்தகால மற்றும் மதிப்பிடப்பட்ட தகவல்களை மையமாகக் கொண்ட தகவல்களை வழங்குதல்.
5. கணக்கீட்டின் தேவைக்கும், அவசியத்துக்கும் ஏற்ப கணக்கீட்டுத் தகவல்களை வழங்குதல்.

BUSINESS & COMMERCE BRANCH

07) நிதிக்கூற்றுக்களை அவதானிக்கும் முதலீட்டாளர்களின் முக்கிய நோக்கம் **அல்லாதது**.

1. முதலீட்டுடன் தொடர்புடைய விடயவாதம், இலாபம் தொடர்பானது
2. முதலீட்டின் பிரதிபலன் தொடர்பானது.
3. இலாபத்தை வழங்கக்கூடிய ஆற்றல் தொடர்பாக தெரிந்து கொள்ளல்.
4. முகாமையாளர்கள், உரிமையாளர்கள் மற்றும் கணக்கீட்டு செயற்பாடு தொடர்பான மதிப்பீட்டை மேற்கொள்ளல்.
5. முதலீட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுமா என்பது.

08) நிகழ்காலத்தில் தேசிய உணவுப் பாவனைக்காக மக்கள் கூடுதலாக தூண்டப்படுவதன் காரணமாக அதனுடன் தொடர்புடைய வியாபாரங்கள் விரிவடைந்து காணப்படுகின்றன. இதற்கு ஏதுவான சூழல் காரணியாவது.

1. தொழினுட்ப சூழல்
2. பொருளாதார மற்றும் அரசியல் சூழல்
3. நுட்பம் மற்றும் தொழில் சார் சூழல்
4. சமூக கலாசாரச் சூழல்
5. சட்டச் சூழல்

09) உலகத்தில் ஏற்படுகின்ற தொற்றுநோய்கள் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் மீது வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு இணையத்தளத்தினூடான வியாபாரத்திற்கு மக்கள் பழக்கப்பட்டுள்ளனர். இந்த நிலமைக்கான காரணமாவது

1. நுட்பம் மற்றும் தொழில் சார் சூழல்
2. பொருளாதார மற்றும் அரசியல் சூழல்
3. தொழினுட்ப சூழல்
4. சட்டச் சூழல்
5. சமூக கலாச்சார சூழல்

10) பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துகின்ற அக்கறை உள்ள கட்சியினரைப் பெயரிடுக

| தகவல் | அக்கறை உள்ள கட்சியினர் |
|---|---|
| 1. நிறுவனம் காலாண்டுக்காக வழங்க உத்தேசித்துள்ள பங்குஇலாபம் | ____________________ |
| 2. நிறுவனம் ஒன்றினால் புதுப்பிக்கப்பட்ட பகுதியின் பிரதிபலன் | ____________________ |
| 3. வருடக் இறுதியில் வழங்க எதிர்பார்க்கப்படுகின்ற மேலதிகக் கொடுப்பனவு | ____________________ |
| 4. புத்துருவாக்கலுக்காக கொடுப்பனவு செய்யப்பட்ட பெறுமதி. | ____________________ |

BUSINESS & COMMERCE BRANCH